சுங்குவார்சத்திரம் பேருந்து நிற்குமிடம்.

* வினா எண். 52—திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் சுங்குவார்சத்திரம் பேருந்து நிலையத்தில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப் படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) சுங்குவார் சத்திரத்தில் பேருந்து நிலையம் இல்லை. திருமங்கலத்தில் ரூ.2 இலட்சம் செலவில் பேருந்து நிலையம் கட்டுவதற்குண்டான திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுங்குவார்சத்திரத்தில் பேருந்து நிலையம் இல்லையென்று சொன்னார்கள். பேருந்து நிலையம் இல்லாவிட்டாலும் நூற்றுக்கணக்கான பேருந்துகள் அவ்வழியாகச் செல்லுவதாலும் அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் சிற்றுண்டி அருந்த இறங்குவதாலும் சிறுநீர் கழிக்க இடம் இல்லாத குறைபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. சுங்குவார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் மனு கொடுத்து நிராகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதுபற்றி விரைவில் முடிவு எடுத்து அங்கு கழிப்பிடங்கள் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சுங்குவார்சத்திரத்தில் இதுவரை பேருந்து நிலையம் இல்லையென்றாலும் மாண்புமிகு உறுப்பினர் யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. து. இராசரத்தினம் : தலைவர் அவர்களே, சுங்குவார் சத்திரத்தைச் சுற்றியிருக்கும் மூன்று கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பணம் ஒதுக்க இயலாது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அரசே தனியாகக் கவனம் செலுத்தி ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகக் கழிப்பிடங்கள் கட்டித்தர ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக எந்தெந்த ஒன்றியங்கள் எடுக்கப்பட்டு வருகின்றனவோ அந்தந்த ஒன்றியங்கள் கழிப்பிடங்கள் கட்டும் திட்டத்தைத்

திட்டி நடைமுறைப்படுத்தி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய யோசனைப்படி கண்டிப்பாகக் கழிப்பிடங்கள் கட்டப்படும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : கழிப்பிடங்கள், மற்ற வசதிகளை தேசீய நெடுஞ்சாலைகளின் முக்கிய இடங்களில் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: முக்கியமான இடங்களில் கட்டுவதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மண்ணச்சநல்லூர் பேரூராட்சி

*வினா எண். 53—திரு. எம். கே. இராஜமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்ணச்சநல்லூர் பேரூராட்சியில் வரி வசூலிப்பதில் ஊழல்கள் நடந்துள்ளது பற்றி புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் என்றால், அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இது சம்பந்தமாக பேரூராட்சியின் தலைமை எழுத்தர் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 7 ஆம் நாள் முதல் தாற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். முழு விவரங்கள் அறிய மாவட்ட ஆட்சித் தலைவரால் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

திரு. எம். கே. இராஜமாணிக்கம் : தலைவர் அவர்களே, அந்தப் பேரூராட்சியின் தலைமை எழுத்தர் தாற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட வரி வசூல் செய்யும் நபர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதுபற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. வரி வசூலிப்போர் மீதும், தவறான முறையில் செயல்பட்டிருக்கிறார்கள் என்று தெரிந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.